DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No: **S.C.No.118/2025**
Prosecution Witness P.W.18

Name : **திரு.செந்தில்குமார் (கூடுதல் சாட்சி)** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

A1 ஆஜரில்லை அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது, மற்ற எதிரிகள் ஆஜர்

**நாள்: 18.03.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் சோழமண்டலம் நிதி நிறுவனம் தேனியில் மேலாளராக 2023 செப்டம்பர் மாதத்தில் இருந்து இன்று வரை தேனியில் பணிபுரிந்து வருகிறேன். எனது பணி என்பது ஏரியா மேனேஜர். பீல்ட் எக்ஸிக்யூட்டிவ் என்பவர் மூலம் கடன் விண்ணப்பங்கள் வரும் பட்சத்தில் அதை பரிசீலனை செய்து முறையான ஆவணம் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அது சம்பந்தமாக கடன்களை நாங்கள் பிராசஸ் செய்வோம்.

2. பொதுவாக ஒரு சொத்து சம்பந்தமா ஒரு கடன் கேட்கும்போது அந்த விண்ணப்பத்தில் என்னென்ன விபரங்கள் ஆவணங்கள் கேட்டு வாங்குவது வழக்கம் என்றால் சம்பந்தப்பட்ட நபரின் ஐடி ப்ரூப் மற்றும் அட்ரஸ் ப்ரூப் கேட்போம் ஆதார் கார்டு கேட்போம், ஆறு மாசத்திற்கான பேங்க் ஸ்டேட்மெண்ட் அக்கவுண்ட் கேட்போம், சொத்து சம்பந்தப்பட்ட ஆவணத்தின் நகல், இபி ரசீது, பட்டா, வீட்டு வரி ரசீது ஆகியவற்றை நகல் கேட்டு வாங்கி நாங்கள் பிரத்தியேகமாக பரிசீலனை செய்வோம். அது சரியாக இருக்கும் பட்சத்தில் நாங்கள் கடன் வழங்குவோம். அவ்வாறு சரியாக இல்லாத பட்சத்தில் கடன்

வழங்க மாட்டோம். இது சம்பந்தப்பட்ட கடன் விண்ணப்பத்தை அந்த ஃபீல்டு எக்ஸிக்யூட்டிவ் தான் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். சதீஷ் என்ற ஃபீல்டு எக்ஸிக்யூட்டிவ் மூலம் பிருந்தா என்ற நபர் கடன் விண்ணப்பம் கேட்டு அணுகி இருந்தார்.

3. 19 அக்டோபர் 2024 ஆம் தேதியன்று கடன் கேட்டிருந்தார். அவர் சமர்ப்பித்த ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்தபோது நில ஆவணம் கொடுத்தது தொடர்பான ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்த போது ஆவணங்களில் காட்டப்பட்டுள்ள அளவிற்கும், சம்பந்தப்பட்ட சொத்தை அளந்து பார்க்கும்போது அதில் குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு வேறுபாடு இருந்தது தெரிய வந்தது எனவே அதன் அடிப்படையில் நாங்கள் பணம் கொடுக்க மறுத்து விட்டோம்.

4. எல்.ஓ.எஸ். அப்ளிகேஷன் என்று நாங்கள் எங்கள் வெப்சைட் சாப்ட்வேரில் இது சம்பந்தமாக குறித்துக் கொண்டு சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கு தெரிவித்து விடுவோம். இது சம்பந்தமாக நாங்கள் பராமரித்து வருகிறோம் அப்ளிகேஷன் இன்பார்ம் என்ற சாப்ட்வேரில் இது சம்பந்தப்பட்ட விண்ணப்பங்களை நாங்கள் பதிவேற்றம் செய்துள்ளோம். இத்துடன் இணைக்கப்பட்ட ஆவணங்களை ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு முறை சாப்ட்வேர் அப்டேட் செய்யும் பொழுது அத்துடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் அதில் இருக்காது. தற்போது நான் தற்போது சோழமண்டலத்தில் வேலை பார்ப்பதற்கான ஐ.டி கார்டு மற்றும் லோன் விண்ணப்ப படிவம் பிரிண்ட் அவுட் எடுத்து சான்றிட்டு வழங்கியுள்ளேன் அந்த விண்ணப்பம் அ.த.சா.ஆ.21.

5. 2–ம் எதிரி பிருந்தா தான் அதில் லோன் அப்ளிகேட் என்றும் 1–வது சதாம் உசேன் கோ அப்ளிகேட் என்றும், 3–வது எதிரி ஈஸ்வரி என்பவர் அதில் கோ அப்ளிகேட் என்றும், பிருந்தா கிராசரி ஷாப் நடத்துவதற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது, சதீஷ் ஃபீல்டு எக்ஸிக்யூடிவ் அவர் வேலையை விட்டு

நின்று விட்டார். பிருந்தா நடத்தி வந்த தொழில் தொடர்பாக தொழில் அபிவிருத்திக்காக இந்த கடன் பெறப்பட்டது.

**<u>எதிரிகள் 1 முதல் 3 தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. 19.10.2024ம் தேதியன்று மேற்கண்ட விண்ணப்பம் தரப்பட்டுள்ளது. நான் செப்டம்பர் 2023ம் தேதியிலிருந்து மேற்கண்ட நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். இடைத்தரகர்கள் மூலமாக கிடைக்கப்படும் விண்ணப்பங்களையும் பெற்று நாங்கள் லோன் பரிசீலனை செய்து வழங்குவது வழக்கம் என்றால் சரியல்ல, பீல்ட் எக்ஸிக்யூட்டி மூலமாக கிடைக்கப்படும் விண்ணப்பங்களை தான் நாங்கள் பரிசீலனை செய்வோம்.

2. இடைத்தரகர் மூலம் லோன் விண்ணப்பம் பெறுவதற்கு வாய்ப்பு உண்டு என்றால் வாய்ப்புண்டு. பத்திர எழுத்தர் ஜெயலட்சுமி மற்றும் முத்துக்குமார் மூலமாகத்தான் இந்த கடன் விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இது சம்பந்தமான விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், அதனால் தான் மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

3. ஒரு கடன் விண்ணப்பதாரர் கொடுக்கும் விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் உண்மை தன்மையை அறிவதற்கு நாங்கள் எங்கள் அலுவலகத்தில் இருந்து அதை சரி பார்ப்பதற்கு முயற்சி மேற்கொள்வோமா என்றால் வாரிசு சான்றிதழ் விசாரணை செய்வதற்கு நேரடியாக சென்று விசாரணை மேற்கொள்வோம், வருவாய் ஆவணங்களை ஆன்லைன் மூலம் பரிசோதனை செய்வோம்.

4. அதேபோல் ஆதார் அட்டை தொடர்பான விபரங்களையும் OTP மூலம் பார்த்து நாங்கள் பரிசோதனை செய்வோம். முறையாக நாங்கள் அந்த விண்ணப்பத்தை பரிசீலனை செய்திருந்தால் இடைத்தரகர்கள் மூலமாக கொடுத்த கடன் விண்ணப்பத்தை நாங்கள் ஏற்று இருக்க மாட்டோம் என்றால் சரியல்ல அவர்கள் கொடுத்த வாரிசு சான்றிதழ், ஆதார் அட்டை மற்றும் இறப்பு சான்றிதழ் ஆகியவை வழக்குக்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள்

என்றால் சரியல்ல எனது பீல்ட் ஆபீஸர் சதீஷ்குமார் மற்றும் இடைத்தரகர்கள் ஆகியோர்களால் கமிஷனுக்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

5. மளிகை கடை அபிவிருத்திக்காக கடன் பெரும் பட்சத்தில் வீட்டுக் கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்காது என்றால் சரியல்ல. வியாபார சம்பந்தமாக தான் லோன் கொடுத்திருப்போம் என்றும் அடமானம் சம்பந்தமாக கடன் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. இந்த கடன் சம்பந்தமாக கடன் விண்ணப்பதாரர்கள் கொடுத்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்து உள்ளேனா என்றால் தற்போது விண்ணப்பம் மட்டுமே கொடுத்துள்ளேன், இது சம்பந்தமாக எங்கள் தலைமை அலுவலகத்தை கேட்டு அவர்களிடமிருந்து பெற்று என்னால் ஆஜர் செய்ய முடியும்.

6. நாங்கள் வியாபாரத்திற்காக கடன் கொடுக்கவில்லை, வீட்டின் பெயரில் தான் கடன் கொடுப்பதற்கு விண்ணப்பம் வாங்கினோம். இந்த வழக்கு தொடர்பாக நாங்கள் சட்டரீதியான கருத்துரை எதுவும் பெற்றோமா என்றால் சொத்தின் அளவு மாறுபட்டு இருந்த காரணத்தினால் நாங்கள் கடன் கொடுக்க இயலாத காரணத்தினால் இது சம்பந்தப்பட்ட சட்டரீதியான கருத்துறை எதுவும் பெறவில்லை. இந்த வழக்கு தொடர்பாக வாரிசு சான்றிதழ் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்றால் ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும்.

7. இந்த வழக்கு பொறுத்தவரை வாரிசு சான்றிதழ் குறித்து விசாரணை எதுவும் நாங்கள் செய்யவில்லை என்றால் முதலில் ஆவணத்தில் கண்டுள்ள அளவு வேறுபட்டு இருந்த காரணத்தினால் நாங்கள் வாரிசு சான்றிதழ் சம்பந்தமான விசாரணை எதுவும் மேற்கொள்ளவில்லை. நான் இன்று வரை சோழமண்டலம் நிதி நிறுவனத்தில் பணிபுரிந்து வருவதை காட்டுவதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, ஐடி கார்டு உள்ளது, எனது ஐ.டி கார்டை ஆஜர் செய்கிறேன்.

8. 2–ம் எதிரியின் பெயர் பிருந்தா தேவி என்றும், பிருந்தா கிடையாது என்றும், போலியாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. இது போலியாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல, 2ம் எதிரி 1ம் எதிரியின் மனைவி என்றால் சரியல்ல. 3–ம் எதிரி, 2ம் எதிரியின் உடன் பிறந்த சகோதரி கிடையாது என்றால் சரியல்ல. முறைகேடாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அதனால் தான் லோன் வழங்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும், இந்த ஆவணத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>4–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.18 16:15:55 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.